tuṭṭa neñcaka vañcakak koṭiyēṉ colva teṉṉai-eṉ tolviṉai vacattāl iṭṭa nalvaḻi alvaḻi eṉavē eṇṇum ivvaḻi iraṇṭiṭai eṉainī viṭṭa tevvaḻi avvaḻi akaṉṟē vēṟum ōrvaḻi mēviṭap paṭumō ciṭṭar uḷḷuṟum civaperu māṉṉiṉ cittam aṉṟiyāṉ ceyvatoṉ ṟilaiyē.

TRANSLATION – What can I say, a cruel one with a wicked, deceitful heart? Driven by my ancient karma, between the two paths considered good and bad, whichever path you leave me on, can I stray from it and reach another? O Lord Siva who dwells in the hearts of the virtuous, apart from your will, I do nothing.

COMMENTARY – Past actions, or *karma*, pull the mind toward good or bad choices. Vallalar admits he cannot steer his life or stray from the path God sets. Total surrender means accepting that human beings are directed by the divine hand.

3

> ஊட்டு கின்றனை உண்ணுகின் றனன்மேல்
> உறக்கு கின்றனை உறங்குகின் றனன்பின்
> காட்டு கின்றனை காணுகின் றனன்நீ
> களிப்பிக் கின்றனை களிப்புறு கின்றேன்
> ஆட்டு கின்றனை ஆடுகின் றனன்இவ்
> அகில கோடியும் அவ்வகை யானால்
> தீட்டும் அன்பருக் கன்பநின் தனது
> சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.

ūṭṭu kiṉṟaṉai uṇṇukiṉ ṟaṉaṉmēl uṟakku kiṉṟaṉai uṟaṅkukiṉ ṟaṉaṉpiṉ kāṭṭu kiṉṟaṉai kāṇukiṉ ṟaṉaṉnī kaḷippik kiṉṟaṉai kaḷippuṟu kiṉṟēṉ āṭṭu kiṉṟaṉai āṭukiṉ ṟaṉaṉiv akila kōṭiyum avvakai yāṉāl tīṭṭum aṉparuk kaṉpaniṉ taṉatu cittam aṉṟiyāṉ ceyvatoṉ ṟilaiyē.

TRANSLATION – You feed me, and I eat. You put me to rest, and I sleep. Then you show things, and I see. You make me rejoice, and I rejoice. You make me dance, and I dance. If millions of universes behave in this very way, O Lover of the devotees who cherish you, apart from your will, I do nothing.

COMMENTARY – Every ordinary action, from eating and sleeping to seeing and rejoicing, is moved by God. Vallalar sees he is directed by the divine, just like millions of universes. Human beings depend on the Lord for every motion and breath.

4

கண்ணி லான்சுடர் காணஉன் னுதல்போல்
கருத்தி லேனும்நின் கருணையை விழைந்தேன்
எண்ணி லாஇடை யூறடுத் ததனால்
இளைக்கின் றேன்எனை ஏன்றுகொள் வதற்கென்
உண்ணி லாவிய உயிர்க்குயிர் அனையாய்
உன்னை ஒத்ததோர் முன்னவர் இலைகாண்
தெண்ணி லாமுடிச் சிவபரம் பொருள்நின்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.

kaṇṇi lāṉcuṭar kāṇa-uṉ ṉutalpōl karutti lēṉumniṉ karuṇaiyai viḻaintēṉ eṇṇi lā-iṭai yūṟaṭut tataṉāl iḷaikkiṉ ṟēṉeṉai ēṉṟukoḷ vataṟkeṉ uṇṇi lāviya uyirkkuyir aṉaiyāy uṉṉai ottatōr muṉṉavar ilaikāṇ teṇṇi lāmuṭic civaparam poruḷniṉ cittam aṉṟiyāṉ ceyvatoṉ ṟilaiyē.

TRANSLATION – Like a blind man wishing to see the light, I desired your grace even though I lack understanding. I grow weary as countless obstacles beset me. To accept me, O You who are the life of the life dwelling within me, there is no primal being equal to you. O Supreme Reality, Siva with the clear moon upon your crown, apart from your will, I do nothing.

COMMENTARY – Wanting divine grace without understanding is like a blind person wishing to see the light. Exhausted by obstacles, Vallalar appeals to the Lord dwelling within him as the life of his life. He casts himself on God, his only rescue.

5

மெச்சு கின்றவர் வேண்டிய எல்லாம்
விழிஇ மைக்குமுன் மேவல்கண் டுனைநான்
நச்சு கின்றனன் நச்சினும் கொடியேன்
நன்மை எய்தவோ வன்மையுற் றிடவோ
இச்சை நன்றறி வாய்அருள் செய்யா
திருக்கின் றாய் உனக் கியான்செய்த தென்னே
செச்சை மேனிஎம் சிவபரஞ் சுடர்நின்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.

meccu kiṉṟavar vēṇṭiya ellām viḻi-i maikkumuṉ mēvalkaṇ ṭuṉaināṉ naccu kiṉṟaṉaṉ nacciṉum koṭiyēṉ naṉmai eytavō vaṉmaiyuṟ ṟiṭavō iccai naṉṟaṟi vāyaruḷ ceyyā tirukkiṉ ṟāy uṉak kiyāṉceyta teṉṉē ceccai mēṉi-em civaparañ cuṭarniṉ cittam aṉṟiyāṉ ceyvatoṉ ṟilaiyē.

TRANSLATION – Seeing those who praise you attain everything they desire before an eye can blink, I yearn for you. Even though I yearn, I am cruel. Whether I am to attain goodness or suffer hardship, you know my desire well. Yet you remain without granting grace. What have I done to you? O Supreme Jothi of Siva with a form red like the Ixora flower, apart from your will, I do nothing.

COMMENTARY – Vallalar watches others receive divine blessings in the blink of an eye and aches for the same grace. He knows he is flawed, yet questions why the Lord leaves him waiting in hardship. He accepts he can do nothing except submit to God's decision.

6

நாடுந் தாயினும் நல்லவன் நமது
நாதன் என்றுனை நாடும்அப் பொழுதே
வாடு நெஞ்சம் தளிர்க்கின்றேன் மற்றை
வைகற் போதெலாம் வாடுகின் றனன்காண்
பாடுந் தொண்டர்கள் இடர்ப்படில் தரியாப்
பண்பென் மட்டும்நின் பால்இலை போலும்
தேடும் பத்தர்தம் உளத்தமர் வோய்நின்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.

nāṭun tāyiṉum nallavaṉ namatu nātaṉ eṉṟuṉai nāṭumap poḻutē vāṭu neñcam taḷirkkiṉṟēṉ maṟṟai vaikaṟ pōtelām vāṭukiṉ ṟaṉaṉkāṇ pāṭun toṇṭarkaḷ iṭarppaṭil tariyāp paṇpeṉ maṭṭumniṉ pālilai pōlum tēṭum pattartam uḷattamar vōyniṉ cittam aṉṟiyāṉ ceyvatoṉ ṟilaiyē.

TRANSLATION – The moment I seek you, thinking, "Our Lord is better than a caring mother," my withered heart blossoms. At all other times of the day, see, I wither. It seems your nature of being unable to bear it when your singing servants suffer is absent only in my case. O you who abide in the hearts of seeking devotees, apart from your will, I do nothing.

COMMENTARY – The mere thought of God's maternal love is enough to revive a despairing heart. Yet Vallalar feels this comfort slip away, leaving him to wonder why God rushes to help others but seems to ignore his suffering.

7

மருள்அ ளித்தெனை மயக்கிஇவ் உலகில்
வருத்து கின்றனை மற்றெனக் குன்றன்

அருள்அ ளிக்கிலை ஆயினும் நினக்கே
அடிமை யாக்கிலை ஆயினும் வேற்றுப்
பொருள்அ ளிக்கிலை ஆயினும் ஒருநின்
பொன்மு கத்தைஓர் போது கண் டிடவே
தெருள்அ ளித்திடில் போதும் இங் குனது
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.

maruḷa ḷitteṉai mayakki-iv ulakil varuttu kiṉṟaṉai maṟṟeṉak kuṉṟaṉ aruḷa ḷikkilai āyiṉum niṉakkē aṭimai yākkilai āyiṉum vēṟṟup poruḷa ḷikkilai āyiṉum oruniṉ poṉmu kattai-ōr pōtu kaṇ ṭiṭavē teruḷa ḷittiṭil pōtum iṅ kuṉatu cittam aṉṟiyāṉ ceyvatoṉ ṟilaiyē.

TRANSLATION – You have given me delusion, bewildered me, and you afflict me in this world. Even if you do not grant me your grace, even if you do not make me your slave, even if you do not grant me any other wealth, it is enough if you grant me the clarity to see your golden face just once. Here, apart from your will, I do nothing.

COMMENTARY – Vallalar asks for nothing but a single moment of clear vision. God can withhold grace, refuse his service, and deny him all wealth. None of that matters if he can just pierce through his worldly delusion to see the divine face even once.

8

மாறு கின்றனன் நெஞ்சகம் அஞ்சி
வள்ளல் இத்துணை வந்திலன் இனிமேல்
கூறு கின்றதென் என்றயர் கின்றேன்
குலவித் தேற்றும்அக் கொள்கையர் இன்றி
ஏறு கின்றனன் இரக்கமுள் ளவன்நம்
இறைவன் இன்றருள் ஈகுவன் என்றே
தேறு கின்றனன் என்செய்கேன் நினது
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.

māṟu kiṉṟaṉaṉ neñcakam añci vaḷḷal ittuṇai vantilaṉ iṉimēl kūṟu kiṉṟateṉ eṉṟayar kiṉṟēṉ kulavit tēṟṟumak koḷkaiyar iṉṟi ēṟu kiṉṟaṉaṉ irakkamuḷ ḷavaṉnam iṟaivaṉ iṉṟaruḷ īkuvaṉ eṉṟē tēṟu kiṉṟaṉaṉ eṉceykēṉ niṉatu cittam aṉṟiyāṉ ceyvatoṉ ṟilaiyē.

TRANSLATION – I falter, my heart fears, and I languish, thinking, "The generous Lord has not come for so long, what is there to say anymore?" Without anyone to affectionately console me, I lift myself up and find

clarity, thinking, "Our Lord is compassionate, He will grant grace today." What can I do? Apart from your will, I do nothing.

COMMENTARY – The spiritual path often swings between fear and sudden hope. Left alone with no one to comfort him, Vallalar falls into despair over God's absence. He then has to pull himself back up, clinging to the thought that a compassionate God must eventually bring relief.

9

தாயி னும்பெருந் தயவுடை யவன்நந்
தலைவன் என்றுநான் தருக்கொடும் திரிந்தேன்
நாயி னும்கடை யேன்படும் இடரை
நாளும் கண்டனை நல்அருள் செய்யாய்
ஆயி னும்திரு முகங்கண்டு மகிழும்
அன்பர் தம்பணி ஆற்றிமற் றுடலம்
தேயி னும்மிக நன்றெனக் கருள்உன்
சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.

tāyi ṉumperun tayavuṭai yavaṉṉan talaivaṉ eṉṟunāṉ tarukkoṭum tirintēṉ nāyi ṉumkaṭai yēṉpaṭum iṭarai nāḷum kaṇṭaṉai nalaruḷ ceyyāy āyi ṉumtiru mukaṅkaṇṭu makiḻum aṉpar tampaṇi āṟṟimaṟ ṟuṭalam tēyi ṉummika naṉṟeṉak karuḷuṉ cittam aṉṟiyāṉ ceyvatoṉ ṟilaiyē.

TRANSLATION – I wandered with pride, thinking, "Our Lord possesses greater compassion than a mother." You see daily the sufferings experienced by me, who am lower than a dog, yet you do not grant your good grace. Even so, grant me grace to feel it is very good even if my body wears away performing service for the devotees who rejoice upon seeing your sacred face. Apart from your will, I do nothing.

COMMENTARY – If a direct connection with God seems blocked, the next best thing is serving those who have found it. Vallalar feels ignored by the divine despite his suffering. In his surrender, he asks only for the strength to wear his body out serving the devotees who have already seen God's face.

10

வானும் வையமும் அளிக்கினும் உன்பால்
மனம்வைத் தோங்குவர் வள்ளல்நின் அடியார்
நானும் அவ்வகை உலகியல் ஒழுக்கில்
நாடி நின்னருள் நலம்பெற விழைதல்

> கூனும் ஓர்முடக் கண்ணிலி வானில்
> குலவும் ஒண்சுடர் குறித்திடல் போலும்
> தேனும் கைக்கும்நின் அருளுண்டேடல் உண்டுன்
> சித்தம் அன்றியான் செய்வதொன் றிலையே.

vāṉum vaiyamum aḷikkiṉum uṉpāl maṉamvait tōṅkuvar vaḷḷalniṉ aṭiyār nāṉum avvakai ulakiyal oḻukkil nāṭi niṉṉaruḷ nalampeṟa viḻaital kūṉum ōrmuṭak kaṇṇili vāṉil kulavum oṇcuṭar kuṟittiṭal pōlum tēṉum kaikkumniṉ aruḷuṇṭēl uṇṭuṉ cittam aṉṟiyāṉ ceyvatoṉ ṟilaiyē.

TRANSLATION – Even if given heaven and earth, your devotees, O generous Lord, keep their minds fixed on you and flourish. My desiring to attain the goodness of your grace while pursuing the worldly path is like a hunchbacked, crippled, and blind person aiming for the radiant sun glowing in the sky. If I have your grace, even honey will taste bitter. Apart from your will, I do nothing.

COMMENTARY – Worldly desires and divine grace cannot be pursued at the same time. Vallalar compares himself to a blind and crippled person trying to reach the sun, feeling it impossible to catch hold of God while clinging to worldly habits. He knows that once grace is given, even the sweetest things in life will lose their taste.

068. LAMENTING IN FEAR - ACHSAT TIRAṅKAL -
அச்சத் திரங்கல்

Editor's note: sung at Chidambaram, which Saiva tradition calls simply "the Temple" (kōyil, கோயில்).

1

துறையிடும் கங்கைச் செழுஞ்சடைக் கனியே
சுயம்பிர காசமே அமுதில்
கறையிடும் கண்டத் தொருபெருங் கருணைக்
கடவுளே கண்ணுதற் கரும்பே
குறையிடும் குணத்தால் கொடியனேன் எனினும்
கொடுந்துய ரால்அலைந் தையா
முறையிடு கின்றேன் அருள்தரா தென்னை
மூடன்என் றிகழ்வது முறையோ.

tuṟaiyiṭum kaṅkaic ceḻuñcaṭaik kaṉiyē cuyampira kācamē amutil kaṟaiyiṭum kaṇṭat toruperuṅ karuṇaik kaṭavuḷē kaṇṇutaṟ karumpē kuṟaiyiṭum kuṇattāl koṭiyaṉēṉ eṉiṉum koṭuntuya rālalain taiyā muṟaiyiṭu kiṉṟēṉ aruḷtarā teṉṉai mūṭaṉeṉ ṟikaḻvatu muṟaiyō.

TRANSLATION – O Fruit on the lush matted hair that holds the Ganga! O self-luminous Light! O God of immense compassion whose throat bears the dark stain! O Sugarcane with an eye on your forehead! Even if I am cruel and flawed in character, I am tossed about by terrible sorrow, O Lord, and I cry out to you. Is it proper for you to despise me as a fool and deny me your grace?

COMMENTARY – Vallalar asks God not to turn him away because he is flawed. He invokes the traditional imagery of Siva: bearing the sacred river Ganga in his matted hair, a third eye of wisdom, and a dark throat from swallowing poison to save the world. His suffering should earn God's compassion, regardless of his ignorance.

2

இகழ்ந்திடேல் எளியேன் தன்னைநீ அன்றி
ஏன்றுகொள் பவரிலை அந்தோ
அகழ்ந்தென துளத்தைச் சூறைகொண் டலைக்கும்
அஞரெலாம் அறுத்தருள் புரிவாய்
புகழ்ந்திடும் தொண்டர் உளத்தினும் வெள்ளிப்

பொருப்பினும் பொதுவினும் நிறைந்து
திகழ்ந்தருள் பழுக்கும் தெய்வதத் தருவே
செல்வமே சிவபரம் பொருளே.

ikaḷntiṭēl eḷiyēṉ taṉṉainī aṉṟi ēṉṟukoḷ pavarilai antō akaḷnteṇa tuḷattaic cūṟaikoṇ ṭalaikkum añarelām aṟuttaruḷ purivāy pukaḷntiṭum toṇṭar uḷattiṉum veḷḷip poruppiṉum potuviṉum niṟaintu tikaḷntaruḷ paḻukkum teyvatat taruvē celvamē civaparam poruḷē.

TRANSLATION – Do not despise this poor wretch. Alas, there is no one but you to accept me. Sever all the sorrows that dig into my heart, ravage it, and toss me about, and grant me your grace. O divine tree that fills the hearts of praising devotees, the silver mountain, and the public hall, shining and ripening with grace! O Wealth! O Supreme Reality of Siva!

COMMENTARY – God is the only refuge left to quiet his ravaged heart. Vallalar describes the divine presence filling three sacred spaces: a devotee's inner heart, the legendary silver mountain of Mount Kailash, and the public hall of the temple at Chidambaram. He views God as a divine tree offering the sweet fruit of grace to anyone seeking shelter.

3

பொருள்எலாம் புணர்க்கும் புண்ணியப் பொருளே
புத்தமு தேகுணப் பொருப்பே
இருள்எலாம் அறுக்கும் பேரொளிப் பிழம்பே
இன்பமே என்பெருந் துணையே
அருள்எலாம் திரண்ட ஒருசிவ மூர்த்தி
அண்ணலே நின்அடிக் கபயம்
மருள்எலாம் கொண்ட மனத்தினேன் துன்ப
மயக்கெலாம் மாற்றிஆண் டருளே.

poruḷelām puṇarkkum puṇṇiyap poruḷē puttamu tēkuṇap poruppē iruḷelām aṟukkum pēroḷip piḻampē iṉpamē eṉperun tuṇaiyē aruḷelām tiraṇṭa oruciva mūrtti aṇṇalē niṉaṭik kapayam maruḷelām koṇṭa maṉattiṉēṉ tuṉpa mayakkelām māṟṟi-āṇ ṭaruḷē.

TRANSLATION – O holy Reality that joins all things together! O fresh nectar! O mountain of good qualities! O blazing mass of great light that severs all darkness! O Bliss! O my great companion! O unique embodiment of Siva formed of concentrated grace! O Lord, I seek refuge at your feet. Remove all the sorrowful confusion of my delusion-filled mind and rule over me.

COMMENTARY – God is a blazing mass of light that destroys the darkness of ignorance. Vallalar sees the divine not as a distant ruler, but as a great companion and pure, concentrated grace. Seeking refuge in this light, he asks God to clear away the mental confusion and delusion causing his suffering.

4

ஆண்டநின் கருணைக் கடலிடை ஒருசிற்
றணுத்துணைத் திவலையே எனினும்
ஈண்டஎன் றன்மேல் தெறித்தியேல் உய்வேன்
இல்லையேல் என்செய்கேன் எளியேன்
நீண்டவன் அயன்மற் றேனைவா னவர்கள்
நினைப்பரும் நிலைமையை அன்பர்
வேண்டினும் வேண்டா விடினும்ஆங் களிக்கும்
விமலனே விடைப்பெரு மானே.

āṇṭaniṉ karuṇaik kaṭaliṭai oruciṟ ṟaṇuttuṇait tivalaiyē eṉiṉum īṇṭa-eṉ ṟaṉmēl teṟittiyēl uyvēṉ illaiyēl eṉceykēṉ eḷiyēṉ nīṇṭavaṉ ayaṉmaṟ ṟēṉaivā ṉavarkaḷ niṉaipparum nilaimaiyai aṉpar vēṇṭiṉum vēṇṭā viṭiṉumāṅ kaḷikkum vimalaṉē viṭaipperu māṉē.

TRANSLATION – Even if you splash just an atom-sized drop from your ruling ocean of compassion upon me, I will be saved. If not, what can I, a poor wretch, do? The tall Vishnu, Brahma, and the other celestials find your state hard to even conceive. Yet you grant that state to your devotees whether they ask for it or not. O immaculate one! O Lord mounted on the bull!

COMMENTARY – Even a single microscopic drop from the vast ocean of divine compassion is enough to save a life. Vallalar points out a contrast: the creator and preserver gods, Brahma and Vishnu, struggle even to comprehend this grace. Yet it is given freely and intimately to true devotees, sometimes before they even ask.

5

பெருமையில் பிறங்கும் பெரியநற் குணத்தோர்
பெற்றதோர் பெருந்தனிப் பொருளே
அருமையில் பிரமன் ஆதிய தேவர்
அடைந்தநற் செல்வமே அமுதே
இருமையிற் பயனும் நின்திரு அருளே
என்றுநின் அடைக்கலம் ஆனேன்

> கருமையிற் பொலியும் விடநிகர் துன்பக்
> களைகளைந் தெனைவிளைத் தருளே.

perumaiyil piṟaṅkum periyanaṟ kuṇattōr peṟṟatōr peruntaṉip poruḷē
arumaiyil piramaṉ ātiya tēvar aṭaintanaṟ celvamē amutē irumaiyiṟ
payaṉum niṉtiru aruḷē eṉṟuniṉ aṭaikkalam āṉēṉ karumaiyiṟ poliyum
viṭanikar tuṉpak kaḷaikaḷain teṉaiviḷait taruḷē.

TRANSLATION – O great and matchless Reality attained by those of great and radiant virtues! O good wealth and nectar attained with difficulty by Brahma and the other gods! Realizing that the fruit of both this world and the next is your holy grace, I have taken refuge in you. Weed out my sorrows that resemble dark poison, and cultivate me with your grace.

COMMENTARY – Divine grace is the only true reward in this life and the next. Using an agricultural metaphor for spiritual growth, Vallalar asks God to act as a farmer, weeding out his dark, poisonous sorrows so his soul can be cultivated and ripened by grace.

6

> விளைத்தனன் பவநோய்க் கேதுவாம் விடய
> விருப்பினை நெருப்புறழ் துன்பின்
> இளைத்தனன் அந்தோ ஏழைமை அதனால்
> என்செய்கேன் என்பிழை பொறுத்துத்
> தளைத்தவன் துயர்நீத் தாளவல் லவர்நின்
> தனைஅன்றி அறிந்திலன் தமியேன்
> கிளைத்தவான் கங்கை நதிச்சடை யவனே
> கிளர்தரும் சிற்பர சிவனே.

viḷaittaṉaṉ pavanōyk kētuvām viṭaya viruppiṉai neruppuṟaḷ tuṉpiṉ
iḷaittaṉaṉ antō ēḻaimai ataṉāl eṉceykēṉ eṉpiḻai poṟuttut taḷaittavaṉ tuyarnīt
tāḷaval lavarniṉ taṉai-aṉṟi aṟintilaṉ tamiyēṉ kiḷaittavāṉ kaṅkai naticcaṭai
yavaṉē kiḷartarum ciṟpara civaṉē.

TRANSLATION – I cultivated desires for worldly objects that cause the disease of birth. I grew weary in sorrow fierce as fire. Alas, what can I do in my ignorance? I stand alone. I know no one else but You who can forgive my faults, remove my binding sorrow, and rule me. O Lord with the branching celestial river Ganges in Your matted hair, O shining Supreme Siva of pure consciousness.

COMMENTARY – Worldly desires act as a disease that traps the soul in endless cycles of birth and suffering. The resulting sorrow burns like fierce

fire. Recognizing his helplessness, Vallalar turns to God as the only presence capable of forgiving his mistakes and breaking his chains.

7

சிற்பர சிவனே தேவர்தம் தலைமைத்
தேவனே தில்லைஅம் பலத்தே
தற்பர நடஞ்செய் தாணுவே அகில
சராசர காரணப் பொருளே
அற்பர்தம் இடஞ்செல் பற்பல துயரால்
அலைதரு கின்றனன் எளியேன்
கற்பகம் அனையநின் திருவருட் கடலில்
களிப்புடன் ஆடுவ தென்றோ.

ciṟpara civaṉē tēvartam talaimait tēvaṉē tillai-am palattē taṟpara naṭañcey tāṇuvē akila carācara kāraṇap poruḷē aṟpartam iṭañcel paṟpala tuyarāl alaitaru kiṉṟaṇaṉ eḷiyēṉ kaṟpakam aṉaiyaniṉ tiruvaruṭ kaṭalil kaḷippuṭaṉ āṭuva teṉṟō.

TRANSLATION – O Supreme Siva of pure consciousness. O Chief of the gods. O Pillar of reality who performs the supreme dance in the hall of Thillai. O Source of all moving and unmoving things in the universe. I wander tossed by endless sorrows, approaching petty people for help. I am poor and helpless. When will I bathe with joy in the ocean of Your divine grace, which grants boons like the heavenly wish-fulfilling tree?

COMMENTARY – There is a stark contrast between the supreme majesty of God and the desperate human condition. Driven by hardship, people often waste time begging ordinary, flawed individuals for help. Vallalar's longing is to stop wandering and plunge into the limitless, wish-fulfilling ocean of divine grace.

8

என்றுநின் அருள்நீர் உண்டுவந் திடும்நாள்
என்றுநின் உருவுகண் டிடும்நாள்
என்றுநின் அடியர்க் கேவல்செய் திடும்நாள்
என்றென தகத்துயர் அறும்நாள்
மன்றுள்நின் றாடும் பரஞ்சுடர்க் குன்றே
வானவர் கனவினும் தோன்றா
தொன்றுறும் ஒன்றே அருண்மய மான
உத்தம வித்தக மணியே.

eṉṟuniṉ aruḷnīr uṇṭuvan tiṭumnāḷ eṉṟuniṉ uruvukaṇ ṭiṭumnāḷ eṉṟuniṉ aṭiyark kēvalcey tiṭumnāḷ eṉṟeṉa takattuyar aṟumnāḷ maṉṟuḷniṉ ṟāṭum parañcuṭark kuṉṟē vāṉavar kaṉaviṉum tōṉṟā toṉṟuṟum oṉṟē aruṇmaya māṉa uttama vittaka maṇiyē.

TRANSLATION – When will the day come for me to drink the waters of Your grace? When will the day come for me to see Your form? When will the day come for me to serve Your devotees? When will the day come for my inner sorrow to be severed? O Mountain of supreme light dancing in the hall. O Ancient One who remains unseen even in the dreams of the celestial beings. O excellent, wondrous Gem made of pure grace.

COMMENTARY – Deep spiritual longing breaks down into four essential desires. Vallalar yearns to taste divine grace, see God's true form, serve other devoted seekers, and end all inner grief. God is addressed as a mountain of supreme light, a presence so vast that even the gods cannot glimpse it in their dreams.

9

வித்தகம் அறியேன் வினையினேன் துன்ப
விரிகடல் ஆழ்ந்தனன் அந்தோ
அத்தக வேனை எடுப்பவர் நின்னை
அன்றிஎங் கணும்இலை ஐயா
மத்தகக் கரியின் உரிபுனை பவள
வண்ணனே விண்ணவர் அரசே
புத்தக நிறைவின் அடியவர் வேண்டும்
பொருள்எலாம் புரிந்தருள் பவனே.

vittakam aṟiyēṉ viṉaiyiṉēṉ tuṉpa virikaṭal āḻntaṉaṉ antō attaka vēṉai eṭuppavar niṉṉai aṉṟi-eṅ kaṇumilai aiyā mattakak kariyiṉ uripuṉai pavaḷa vaṇṇaṉē viṇṇavar aracē puttaka niṟaiviṉ aṭiyavar vēṇṭum poruḷelām purintaruḷ pavaṉē.

TRANSLATION – I possess no wisdom. I am bound by past actions. I have sunk into the vast ocean of sorrow. Alas. O Lord, I have no one anywhere to lift me up from this state except You. O coral-hued Lord who wears the flayed skin of the mighty elephant. O King of the celestials. O Lord who grants every desire of devotees filled with the perfect knowledge of scriptures.

COMMENTARY – Past actions bind the soul and pull it into a deep ocean of sorrow. Acknowledging a lack of wisdom, Vallalar admits he is powerless

to save himself. He appeals to divine grace as the only force capable of reaching down and pulling him to safety.

10

அருள்பவன் நின்னை அல்லதை இங்கும்
அங்கும்மற் றெங்கும்இன் றதுபோல்
மருள்பவன் என்னை அல்லதை மண்ணும்
வானமும் தேடினும் இன்றே
இருள்பவம் உடையேன் என்செய்கேன் நின்தாள்
இணைதுணை எனநினைந் துற்றேன்
மருள்பவத் தொடும்என் துயர்அறுத் தாள்வாய்
வாழிய அருட்பெருந் துறையே.

aruḷpavaṉ niṉṉai allatai iṅkum aṅkummaṟ ṟeṅkumiṉ ṟatupōl maruḷpavaṉ eṉṉai allatai maṇṇum vāṉamum tēṭiṉum iṉṟē iruḷpavam uṭaiyēṉ eṉceykēṉ niṉtāḷ iṇaituṇai eṉaniṉain tuṟṟēṉ maruḷpavat toṭumeṉ tuyaraṟut tāḷvāy vāḻiya aruṭperun tuṟaiyē.

TRANSLATION – Just as there is no one to bestow grace except You, here, there, or anywhere else, there is no one as deluded as me, even if one searches the earth and the heavens. I possess this dark worldly birth. What can I do? I approached You, trusting Your twin feet as my only support. Destroy my sorrow and this deluding birth, and rule over me. Long live the great harbor of grace.

COMMENTARY – There is a humble symmetry between the creator and the soul. Just as there is no source of grace anywhere in the universe other than God, there is no one as lost in dark delusion as Vallalar. Helpless, he casts himself at God's feet, asking for his worldly confusion to be destroyed forever.

069. LAMENTING THE MOCKERY OF OTHERS - PUṞAMOḶIK KIRAṄKAL - புறமொழிக் கிரங்கல்

1

கேளனந் தான்ஒரு போதுண் டனைமனக் கேதம்அற
நீளனம் தேடு முடியான் எதுநினக் கீந்ததென்றே
வேளனம் போல்நடை மின்னாரும் மைந்தரும் வேடிக்கையாய்
ஏளனம் செய்குவர் நீஅரு ளாவிடில் என்அப்பனே.

kēḷaṉan tāṉoru pōtuṇ ṭaṉaimaṉak kētamaṟa nīḷaṉam tēṭu muṭiyāṉ etuniṉak kīntateṉṟē vēḷaṉam pōlnaṭai miṉṉārum maintarum vēṭikkaiyāy ēḷaṉam ceykuvar nī-aru ḷāviṭil eṉappaṉē.

TRANSLATION – My Father! If you do not bestow grace, young women with swan-like gaits and young men will mock me for sport, saying: "Listen, you ate only one meal a day to rid your mind of sorrow. What did the Lord, whose crown the great swan sought, give you?"

COMMENTARY – Intense spiritual discipline looks foolish to ordinary people without visible divine grace. Vallalar worries carefree youth will mock his strict fasting, a practice meant to clear the mind of worldly sorrow. The "great swan" refers to the creator deity Brahma taking the form of a bird to search in vain for the top of the Lord's infinite pillar of light.

2

அப்பாநின் பொன்னருள் என்மேல் தயைசெய் தளித்திலையேல்
துப்பா னவும்ஒரு போதுதுவ் வாது சுழன்றனையே
இப்பாரில் ஈசன் திருவருள் நீபெற்ற தெங்ஙனமோ
செப்பாய் எனவரிப் பார்சிரிப் பார்இச் செகத்தவரே.

appāniṉ poṉṉaruḷ eṉmēl tayaicey taḷittilaiyēl tuppā ṉavumoru pōtutuv vātu cuḻaṉṟaṉaiyē ippāril īcaṉ tiruvaruḷ nīpeṟṟa teṅṅaṉamō ceppāy eṉavarip pārciṟip pāric cekattavarē.

TRANSLATION – Father! If you do not mercifully bestow your golden grace upon me, the people of this world will taunt and laugh at me, saying: "You wandered around without eating good food even once a day. Tell us, how did you attain the Lord's holy grace on this earth?"

COMMENTARY – Society measures every effort by visible results. Wandering and refusing the comfort of good food are standard marks of a

seeker, yet people will quickly point out the futility of such hardship if it brings no blessing. Vallalar feels exposed to public ridicule while waiting on God's mercy.

3

தீதுசெய் தேற்கருள் செய்வான்நின் சித்தம் திரும்பிலையேல்
தாதுசெய் தேகத்து ணாஒரு போது தவிர்ந்தநினக்
கேதுசெய் தான்சிவன் என்றே உலகர் இழிவுரைத்தால்
யாதுசெய் வேன்தெய்வ மேஎளி யேன்உயிர்க் கின்னமுதே.

tītucey tēṟkaruḷ ceyvāṉniṉ cittam tirumpilaiyēl tātucey tēkattu ṇā-oru pōtu tavirntaniṉak kētucey tāṉcivaṉ eṉṟē ulakar iḻivuraittāl yātucey vēṉteyva mē-eḷi yēṉuyirk kiṉṉamutē.

TRANSLATION – O God! Sweet nectar of this poor one's life! If your heart does not turn to bestow grace upon me who has done wrong, the people of the world will insult me, asking: "You gave up eating even once a day for this physical body. What did Siva do for you?" If they speak so, what will I do?

COMMENTARY – The pain of public insult is amplified by a sense of unworthiness. Ordinary people cannot understand starving the physical body unless God intervenes. By calling the Lord the sweet nectar of his life, Vallalar shows the real heartbreak is the prospect of being abandoned by his only sustenance.

4

தெரியாமை யால்சிறி யேன்செய்குற் றத்தைநின் சித்தமதில்
பிரியாமை வைத்தருள் செய்திலை யேல்எனைப் பெற்றவளும்
பெரியாசை கொண்டபிள் ளாய்அரன் என்தரப் பெற்றதென்றே
பரியாசை செய்குவ ளால்அய லார்என் பகருவதே.

teriyāmai yālciṟi yēṉceykuṟ ṟattainiṉ cittamatil piriyāmai vaittaruḷ ceytilai yēleṉaip peṟṟavaḷum periyācai koṇṭapiḷ ḷāyaraṉ eṉtarap peṟṟateṉṟē pariyācai ceykuva ḷālaya lāreṉ pakaruvatē.

TRANSLATION – If you keep the faults this little one committed out of ignorance in your mind and do not grant grace, even the mother who bore me will mock me, saying: "O child who harbored great desires! What did Hara give you?" What then will strangers say?

COMMENTARY – The fear of ridicule peaks when Vallalar imagines his own mother scoffing at his spiritual desires. If the person who gave him life

mocks his devotion to Hara (a name for God as the remover of illusions), the judgment of strangers will be unbearable. He begs God to overlook the faults born of human ignorance and offer protection from this intimate shame.

5

எண்ணாமல் நாயடி யேன்செய்த குற்றங்கள் யாவும்எண்ணி
அண்ணாநின் சித்தம் இரங்காய் எனில்இங் கயலவர்தாம்
பெண்ஆர் இடத்தவன் பேரருள் சற்றும் பெறாதநினக்
கொண்ணாதிவ் வண்மை விரதம்என் றால்என் உரைப்பதுவே.

eṇṇāmal nāyaṭi yēṉceyta kuṟṟaṅkaḷ yāvumeṇṇi aṇṇāniṉ cittam iraṅkāy eṉiliṅ kayalavartām peṇār iṭattavaṉ pēraruḷ caṟṟum peṟātaniṉak koṇṇātiv vaṇmai viratameṉ ṟāleṉ uraippatuvē.

TRANSLATION – O Lord! If you count all the faults committed by this dog-like servant instead of ignoring them, and if your heart does not show pity, outsiders here will say to me: "You received none of the great grace of the Lord who holds a woman on His left side. This severe vow is unfit for you." If they say this, what will I reply?

COMMENTARY – Vallalar fears the harsh verdict of society declaring him unfit for his vows if he fails to attain grace. He begs God not to weigh his past mistakes but to respond with pity. The description of the Lord holding a woman on His left side refers to Ardhanarishvara, representing the balance of divine justice and mercy.

6

பொய்யான வஞ்சக னேன்பிழை யாவும் பொறுத்துனருள்
செய்யாய் எனில்எது செய்குவன் யான்இச் செகதலத்தோர்
எய்யா விரதத்தில் யாதுபெற் றாய்என் றிகழ்வர்கண்டாய்
அய்யாஎன் இன்னமு தேஅர சேஎன தாண்டவனே.

poyyāṉa vañcaka ṉēṉpiḻai yāvum poṟuttuṉaruḷ ceyyāy eṉiletu ceykuvaṉ yāṉic cekatalattōr eyyā viratattil yātupeṟ ṟāyeṉ ṟikaḻvarkaṇṭāy ayyā-eṉ iṉṉamu tē-ara cē-eṉa tāṇṭavaṉē.

TRANSLATION – If you do not forgive all the mistakes of this false deceiver and grant your grace, what will I do? The people of this world will mock me, asking, "What did you gain from your tireless vows?" O Lord, my sweet nectar, my King, my Ruler.

COMMENTARY – Strict spiritual vows mean nothing to the outside world unless the soul experiences God's presence. Vallalar feels flawed and fears public ridicule if his efforts end in failure.

7

உன்உள்ளம் கொண்டேற் கருளாய் எனில்இவ் உலகர்பொய்யாம்
என்உள்ளம் கொண்ட களவறி யாதுநின் றேடவிங்கே
நின்உள்ளம் கொள்விர தப்பயன் யாது நிகழ்த்தெனவே
முன்உள்ளம் கொண்டு மொழிவர்கண் டாய்எம் முதலவனே.

uṉuḷḷam koṇṭēṟ karuḷāy eṉiliv ulakarpoyyām eṉuḷḷam koṇṭa kaḷavaṟi yātuniṉ ṟēṭaviṅkē niṉuḷḷam koḷvira tappayaṉ yātu nikaḻtteṉavē muṉuḷḷam koṇṭu moḻivarkaṇ ṭāyem mutalavaṉē.

TRANSLATION – If you do not accept me in your heart and grant your grace, these worldly people, unaware of the deceit in my false heart, will step forward and say, "Tell us the fruit of the vows you held in your heart." See, they will boldly speak this way, O our Primal Lord.

COMMENTARY – Society often judges a spiritual life by its visible rewards. Vallalar admits his heart holds secret deceit that others cannot see, knowing they will gladly mock his outward religious vows if God remains silent.

8

முந்தோகை கொண்டுநின் தண்ணருள் வாரியின் மூழ்குதற்கிங்
கந்தோஎன் துன்பம் துடைத்தரு ளாய்எனில் ஆங்குலகர்
வந்தோ சிவவிர தாஎது பெற்றனை வாய்திறஎன்
றிந்தோர் தருசடை யாய்விடை யாய்என்னை ஏசுவரே.

muntōkai koṇṭuniṉ taṇṇaruḷ vāriyiṉ mūḻkutaṟkiṅ kantō-eṉ tuṉpam tuṭaittaru ḷāyeṉil āṅkulakar vantō civavira tā-etu peṟṟaṉai vāytiṟa-eṉ ṟintōr tarucaṭai yāyviṭai yāyeṉṉai ēcuvarē.

TRANSLATION – Alas, if you do not wipe away my sorrow and grant your grace so I can bathe in the ocean of your cool grace with supreme longing, the people of the world will come and demand, "O follower of Siva's vows, what did you gain? Open your mouth!" O Lord with the crescent moon in your matted hair, O rider of the bull, they will mock me.

COMMENTARY – The poem imagines the painful ridicule directed at someone who follows traditional religious practices but remains spiritually

empty. Without the direct experience of divine grace, the outward signs of a devotee only invite the world's laughter.

9

ஆசும் படியில் அகங்கா ரமும்உடை யான்என்றெண்ணிப்
பேசும் படியில் எனக்கரு ளாய்எனில் பேருலகோர்
ஏசும் படிவரும் பொய்வேடன் என்றதை எண்ணிஎண்ணிக்
கூசும் படிவரு மேஎன்செய் கேன்என் குலதெய்வமே.

ācum paṭiyil akaṅkā ramumuṭai yāṉeṉṟeṇṇip pēcum paṭiyil eṉakkaru ḷāyeṉil pērulakōr ēcum paṭivarum poyvēṭaṉ eṉṟatai eṇṇi-eṇṇik kūcum paṭivaru mē-eṉcey kēṉeṉ kulateyvamē.

TRANSLATION – If you see me as a flawed and arrogant person on this earth and refuse to grant me your grace, I will become known as a false ascetic facing the mockery of the vast world. Thinking about this constantly, I shrink in shame. What will I do, O deity of my lineage?

COMMENTARY – A spiritual life lived without inner transformation feels like pretending. Vallalar dreads being exposed as a false ascetic and shrinks in shame at the thought of the world discovering his lingering pride.

10

ஐதட் டிடும்நெஞ் சகத்தேன் பிழைகளை ஆய்ந்துவெறும்
பொய்தட் டிகல்உடை யேற்குன் கருணை புரிந்திலையேல்
வெய்தட்டி உண்ட விரதாநின் நோன்பு விருத்தம்என்றே
கைதட்டி வெண்ணகை செய்வர்கண் டாய்அருட் கற்பகமே.

aitaṭ ṭiṭumneñ cakattēṉ piḻaikaḷai āyntuveṟum poytaṭ ṭikaluṭai yēṟkuṉ karuṇai purintilaiyēl veytaṭṭi uṇṭa viratāniṉ nōṉpu viruttameṉṟē kaitaṭṭi veṇṇakai ceyvarkaṇ ṭāyaruṭ kaṟpakamē.

TRANSLATION – If you examine the mistakes of my weak heart and refuse your compassion to me, a man filled with sheer falsehood and hostility, people will clap their hands and laugh mockingly, saying, "O ascetic who secretly feasted, your penance is useless!" See this, O wish-fulfilling tree of grace.

COMMENTARY – The deepest humiliation for a seeker is being exposed as a hypocrite. Vallalar fears performing public acts of penance while secretly indulging earthly desires, a failure that reduces the spiritual journey to a joke.

070. LAMENTING THE FAILURE TO RECEIVE GRACE - KARUṆAI PEṞĀ TIRAṅKAL - கருணை பெறா திரங்கல்

Editor's note: a general poem (potu, பொது), not tied to one temple.

1

நன்றி ஒன்றிய நின்னடி யவர்க்கே
நானும் இங்கொரு நாயடி யவன்காண்
குன்றின் ஒன்றிய இடர்மிக உடையேன்
குற்றம் நீக்கும்நல் குணமிலேன் எனினும்
என்றின் ஒன்றிய சிவபரஞ் சுடரே
இன்ப வாரியே என்னுயிர்த் துணையே
ஒன்றின் ஒன்றிய உத்தமப் பொருளே
உனைஅ லால்எனை உடையவர் எவரே.

naṉṟi oṉṟiya niṉṉaṭi yavarkkē nāṉum iṅkoru nāyaṭi yavaṉkāṇ kuṉṟiṉ oṉṟiya iṭarmika uṭaiyēṉ kuṟṟam nīkkumnal kuṇamilēṉ eṉiṉum eṉṟiṉ oṉṟiya civaparañ cuṭarē iṉpa vāriyē eṉṉuyirt tuṇaiyē oṉṟiṉ oṉṟiya uttamap poruḷē uṉai-a lāleṉai uṭaiyavar evarē.

TRANSLATION – I am a dog-like servant to your devotees who abound in goodness. My sorrows are huge like a mountain. Even though I lack the good qualities that eradicate faults, O Supreme Light of Siva that shines eternally! O ocean of bliss! O companion of my soul! O Supreme Reality united in the One! Who else claims me but You?

COMMENTARY – Placing himself at the very bottom, Vallalar calls himself a dog serving God's true devotees. Lacking the good qualities to fix his faults, and bearing huge sorrows, he appeals directly to the Supreme Light. He asks how anyone but God could take ownership of such a flawed soul.

2

தீது செய்தனன் செய்கின்றேன் செய்வேன்
தீய னேன்கொடுந் தீக்குண இயல்பே
ஏது செய்தன னேனும்என் தன்னை
ஏன்று கொள்வதெம் இறைவநின் இயல்பே
ஈது செய்தனை என்னைவிட் டுலகில்
இடர்கொண் டேங்கென இயம்பிடில் அடியேன்
ஓது செய்வதொன் றென்னுயிர்த் துணையே

> உனைஅ லால்எனை உடையவர் எவரே.

tītu ceytaṉaṉ ceykiṉṟēṉ ceyvēṉ tīya ṉēṉkoṭun tīkkuṇa iyalpē ētu ceytaṉa ṉēṉumeṉ taṉṉai ēṉṟu koḷvatem iṟaivaniṉ iyalpē ītu ceytaṉai eṉṉaiviṭ ṭulakil iṭarkoṇ ṭēṅkeṉa iyampiṭil aṭiyēṉ ōtu ceyvatoṉ ṟeṉṉuyirt tuṇaiyē uṉai-a lāleṉai uṭaiyavar evarē.

TRANSLATION – I did evil, I do evil, and I will do evil. I am wicked, and cruel, bad qualities form my nature. Whatever I have done, accepting me is your nature, my Lord. If you tell me to leave because of what I have done, leaving me to suffer and languish in the world, I have only one thing to say, O companion of my soul. Who else claims me but You?

COMMENTARY – Vallalar admits he has done wrong in the past, does it now, and will do it again. He contrasts his wicked nature with God's nature of pure acceptance. If God turns him away for his actions, he has nowhere else to go. His only defense is that he belongs to the divine.

3

> சென்ற நாளினும் செல்கின்ற நாளில்
> சிறிய னேன்மிகத் தியங்குறு கின்றேன்
> மன்ற நான்இவண் இவ்வகை ஆனால்
> வள்ள லேநினை வழுத்துமா றெதுவோ
> என்ற னால்இனி ஆவதொன் றிலைஉன்
> எண்ணம் எப்படி அப்படி இசைக
> உன்ற னால்களித் துவகைகொள் கின்றேன்
> உனைஅ லால்எனை உடையவர் எவரே.

ceṉṟa nāḷiṉum celkiṉṟa nāḷil ciṟiya ṉēṉmikat tiyaṅkuṟu kiṉṟēṉ maṉṟa nāṉivaṇ ivvakai āṉāl vaḷḷa lēniṉai vaḷuttumā ṟetuvō eṉṟa ṉāliṉi āvatoṉ ṟilai-uṉ eṉṉam eppaṭi appaṭi icaika uṉṟa ṉālkaḷit tuvakaikoḷ kiṉṟēṉ uṉai-a lāleṉai uṭaiyavar evarē.

TRANSLATION – I, a lowly man, am bewildered even more today than in the days past. O Lord of the Hall! O Generous One! If I remain in this state here, how can I praise you? There is nothing more I can do. Let your will be done. I rejoice and delight only through You. Who else claims me but You?

COMMENTARY – With the confusion of worldly life growing worse, Vallalar admits he has reached the limit of his efforts. Calling out to the Lord of the Hall (the space of divine presence and cosmic dance), he surrenders his will. He finds joy trusting God to handle what he cannot.

4

மையல் வாழ்க்கையில் நாள்தொறும் அடியேன்
வருந்தி நெஞ்சகம் மாழ்குவ தெல்லாம்
ஐய ஐயவோ கண்டிடா தவர்போல்
அடம்பி டிப்பதுன் அருளினுக் கழகோ
செய்ய மேல்ஒன்றும் அறிந்திலன் சிவனே
தில்லை மன்றிடைத் தென்முக நோக்கி
உய்ய வைத்ததாள் நம்பிநிற் கின்றேன்
உனைஅ லால்எனை உடையவர் எவரே.

maiyal vāḻkkaiyil nāḷtoṟum aṭiyēṉ varunti neñcakam māḻkuva tellām aiya aiyavō kaṇṭiṭā tavarpōl aṭampi ṭippatuṉ aruḷiṉuk kaḻakō ceyya mēloṉṟum aṟintilaṉ civaṉē tillai maṉṟiṭait teṉmuka nōkki uyya vaittatāḷ nampiniṟ kiṉṟēṉ uṉai-a lāleṉai uṭaiyavar evarē.

TRANSLATION – Every day in this deluded life, this servant suffers and my heart faints. O Lord! Alas! Is it fitting for your grace to stubbornly ignore my suffering like someone who cannot see? O Siva, I know nothing else to do. I stand trusting the feet that saved me, looking south in the Hall of Thillai. Who else claims me but You?

COMMENTARY – The pain of worldly delusion breaks Vallalar's heart. He asks God if it is right to act blind and ignore this suffering. Having no other solution, he stands fixed in trust, looking south in the Hall of Thillai (Chidambaram), waiting for the grace that once saved him to act again.

5

மண்ண கச்சிறு வாழ்க்கையின் பொருட்டால்
வருந்தி மற்றதன் வன்மைகள் எல்லாம்
எண்ண எண்ணஎன் நெஞ்சகம் பதைப்புற்
றேங்கி ஏங்கிநான் இளைப்புறு கின்றேன்
அண்ணல் நின்திரு அருட்டுணை அடைந்தால்
அமைந்து வாழ்குவன் அடைவகை அறியேன்
உண்ண நல்அமு தனையஎம் பெருமான்
உனைஅ லால்எனை உடையவர் எவரே.

maṇṇa kacciṟu vāḻkkaiyiṉ poruṭṭāl varunti maṟṟataṉ vaṉmaikaḷ ellām eṇṇa eṇṇa-eṉ neñcakam pataippuṟ ṟēṅki ēṅkināṉ iḷaippuṟu kiṉṟēṉ aṇṇal niṉtiru aruṭṭuṇai aṭaintāl amaintu vāḻkuvaṉ aṭaivakai aṟiyēṉ uṇṇa nalamu taṉaiya-em perumāṉ uṉai-a lāleṉai uṭaiyavar evarē.

TRANSLATION – Suffering for the sake of this petty earthly life, my heart shudders the more I think of all its cruelties. I languish and grow weary. O Supreme Lord, if I reach the support of your holy grace, I will live in peace. Yet I do not know how to reach it. O my Lord, you are like sweet ambrosia to consume. Who else claims me but You?

COMMENTARY – The triviality of earthly survival fills Vallalar with dread and exhaustion. Knowing true peace comes only from divine grace, he confesses he does not know how to reach it. He compares God to life-giving nectar (ambrosia), asking to be claimed because he cannot make the journey alone.

6

அன்னை அப்பனும் நீஎன மகிழ்ந்தே
அகங்கு ளிர்ந்துநான் ஆதரித் திருந்தேன்
என்னை இப்படி இடர்கொள விடுத்தால்
என்செய் கேன் இதை யாரொடு புகல்கேன்
பொன்னை ஒத்தநின் அடித்துணை மலரைப்
போற்று வார்க்குநீ புரிகுவ திதுவோ
உன்னை எப்படி ஆயினும் மறவேன்
உனைஅ லால்எனை உடையவர் எவரே.

aṉṉai appaṉum nī-eṉa makiḻntē akaṅku ḷirntunāṉ ātarit tiruntēṉ eṉṉai ippaṭi iṭarkoḷa viṭuttāl eṉcey kēṉ itai yāroṭu pukalkēṉ poṉṉai ottaniṉ aṭittuṇai malaraip pōṟṟu vārkkunī purikuva tituvō uṉṉai eppaṭi āyiṉum maṟavēṉ uṉai-a lāleṉai uṭaiyavar evarē.

TRANSLATION – Rejoicing that you are my mother and father, my heart cooled and I sought your refuge. If you abandon me to suffer like this, what will I do? To whom will I tell this? Is this what you do to those who praise your twin flower-like feet that shine like gold? Whatever happens, I will never forget you. Who else claims me but You?

COMMENTARY – Questioning God's treatment of those who trust him, Vallalar approaches the divine as a child approaches its parents, finding comfort in that bond. Even feeling abandoned to suffering, he refuses to seek help anywhere else.

7

நீலம் இட்டகண் மடவியர் மயக்கால்
நெஞ்சம் ஓர்வழி நான்ஒரு வழியாய்

ஞாலம் இட்ட இவ் வாழ்க்கையில் அடியேன்
நடுங்கி உள்ளகம் நலியும்என் தன்மை
ஆலம் இட்டருள் களத்தநீ அறிந்தும்
அருள்அ ளித்திலை ஆகமற் றிதனை
ஓலம் இட்டழு தரற்றிஎங் குரைப்பேன்
உனைஅ லால்எனை உடையவர் எவரே.

nīlam iṭṭakaṇ maṭaviyar mayakkāl neñcam ōrvaḻi nāṉoru vaḻiyāy ñālam iṭṭa iv vāḻkkaiyil aṭiyēṉ naṭuṅki uḷḷakam naliyumeṉ taṉmai ālam iṭṭaruḷ kaḷattanī aṟintum aruḷa ḷittilai ākamaṟ ṟitaṉai ōlam iṭṭaḻu tararṟi-eṅ kuraippēṉ uṉai-a lāleṉai uṭaiyavar evarē.

TRANSLATION – Deluded by women with collyrium-lined eyes, my heart went one way and I went another. I tremble and wither within in this worldly life. You hold the poison in your graceful throat. Even knowing my nature, you have not granted your grace. Where can I weep, wail, and cry out about this? Who else claims me but You?

COMMENTARY – Worldly desires pull Vallalar in opposite directions, dividing mind from action. He reminds God of the ancient story where Lord Siva drank cosmic poison to save the universe, asking why such a merciful God ignores his current suffering. With nowhere else to turn, he brings his tears directly to the divine.

8

கொடிய பாவியேன் படும்பரி தாபம்
குறித்துக் கண்டும்என் குறைஅகற் றாது
நெடிய காலமும் தாழ்த்தனை நினது
நெஞ்சும் வஞ்சகம் நேர்ந்ததுண் டேயோ
அடியர் தந்துயர் கண்டிடில் தரியார்
ஐயர் என்பர்என் அளவஃ திலையோ
ஒடிய மாதுயர் நீக்கிடாய் என்னில்
உனைஅ லால்எனை உடையவர் எவரே.

koṭiya pāviyēṉ paṭumpari tāpam kuṟittuk kaṇṭumeṉ kuṟai-akaṟ ṟātu neṭiya kālamum tāḻttaṉai niṉatu neñcum vañcakam nērntatuṇ ṭēyō aṭiyar tantuyar kaṇṭiṭil tariyār aiyar eṉpareṉ aḷavaḵ tilaiyō oṭiya mātuyar nīkkiṭāy eṉṉil uṉai-a lāleṉai uṭaiyavar evarē.

TRANSLATION – You clearly see the suffering of this cruel sinner, yet you have not removed my flaws. You have delayed for a long time. Has your heart taken up deceit? People say the Lord cannot bear to see the sorrow of

his devotees. Does that not apply to me? If you do not remove this crushing sorrow, who else claims me but You?

COMMENTARY – Vallalar challenges God's reputation for mercy. Since tradition says the divine cannot bear to see a devotee suffer, Vallalar asks if God is deceiving him by delaying help. This questioning comes from an intimacy where a devotee feels close enough to demand answers from his master.

9

என்என் றேழையேன் நாணம்விட் டுரைப்பேன்
இறைவ நின்றனை இறைப்பொழு தேனும்
உன்என் றால்என துரைமறுத் தெதிராய்
உலக மாயையில் திலகமென் றுரைக்கும்
மின்என் றால்இடை மடவியர் மயக்கில்
வீழ்ந்தென் நெஞ்சகம் ஆழ்ந்துவிட் டதனால்
உன்அன் பென்பதென் னிடத்திலை யேனும்
உனைஅ லால்எனை உடையவர் எவரே.

eṉeṉ ṟēḻaiyēṉ nāṇamviṭ ṭuraippēṉ iṟaiva niṉṟaṇai iṟaippoḻu tēṉum uṉeṉ ṟāleṉa turaimaṟut tetirāy ulaka māyaiyil tilakameṉ ṟuraikkum miṉeṉ ṟāliṭai maṭaviyar mayakkil vīḻnteṉ neñcakam āḻntuviṭ ṭataṇāl uṇaṉ peṉpateṉ ṉiṭattilai yēṉum uṉai-a lāleṉai uṭaiyavar evarē.

TRANSLATION – What can this poor wretch say after abandoning all shame? O Lord, if I tell my heart to think of you for even a fleeting moment, it refuses my word and opposes me. My heart has fallen and sunk into the delusion of women with lightning-like waists, those called the very pinnacle of worldly illusion. Because of this, there is no love for you within me. Even so, who else claims me but You?

COMMENTARY – Vallalar admits his mind rebels against him, refusing to focus on the divine for even a second. Swallowed by physical attraction and worldly illusions, he confesses he currently feels no love for God. Yet he still asks to be saved, relying on God's unchanging nature instead of his own merit.

10

அடிய னேன்மிசை ஆண்டவ நினக்கோர்
அன்பி ருந்ததென் றகங்கரித் திருந்தேன்
கொடிய னேன்படும் இடர்முழு தறிந்தும்

> கூலி யாளனைப் போல்எனை நினைத்தே
> நெடிய இத்துணைப் போதும்ஓர் சிறிதும்
> நெஞ்சி ரங்கிலை சஞ்சலத் தறிவும்
> ஒடிய நின்றனன் என்செய்கேன் சிவனே
> உனைஅ லால்எனை உடையவர் எவரே.

aṭiya ṉēṉmicai āṇṭava niṉakkōr aṉpi runtateṉ ṟakaṅkarit tiruntēṉ koṭiya ṉēṉpaṭum iṭarmuḻu taṟintum kūli yāḷaṉaip pōleṉai niṉaittē neṭiya ittuṇaip pōtumōr ciṟitum neñci raṅkilai cañcalat taṟivum oṭiya niṉṟaṉaṉ eṉceykēṉ civaṉē uṉai-a lāleṉai uṭaiyavar evarē.

TRANSLATION – O Lord, I was proud in thinking you held some love for your servant. Though you fully know the troubles this cruel sinner suffers, you regard me as a mere hired laborer. For all this long time, your heart has not pitied me in the slightest. I stand here with my mind broken by sorrow. What will I do, O Lord Siva? Who else claims me but You?

COMMENTARY – Vallalar feels God is treating him with cold distance, like a master ignoring a hired laborer. His earlier pride in thinking he was specially loved has been shattered by this long silence. Standing with a broken mind, he repeats his core realization: he has no refuge but Lord Siva.

071. THE DECAD OF DIVINE GRACE - TIRUVARUṬ PATIKAM - திருவருட் பதிகம்

1

வளங்கிளர் சடையும் விளங்கிய இதழி மாலையும் மால்அயன் வழுத்தும்
குளங்கிளர் நுதலும் களங்கிளர் மணியும் குலவுதிண் புயமும்அம் புயத்தின்
தளங்கிளர் பதமும் இளங்கதிர் வடிவும் தழைக்கநீ இருத்தல்கண் டுவத்தல்
உளங்கிளர் அமுதே துளங்குநெஞ் சகனேன் உற்றரு ணையில்பெற அருளே.

vaḷaṅkiḷar caṭaiyum viḷaṅkiya itaḻi mālaiyum mālayaṉ vaḻuttum kuḷaṅkiḷar nutalum kaḷaṅkiḷar maṇiyum kulavutiṇ puyamumam puyattiṉ taḷaṅkiḷar patamum iḷaṅkatir vaṭivum taḻaikkanī iruttalkaṇ ṭuvattal uḷaṅkiḷar amutē tuḷaṅkuneñ cakaṉēṉ uṟṟaru ṇaiyilpeṟa aruḷē.

TRANSLATION – O nectar surging in the heart, grant your grace so that I, possessing a trembling heart, may reach Arunai and rejoice at the sight of your majestic presence. You sit there flourishing with fertile matted hair, a bright konrai flower garland, a radiant forehead praised by Vishnu and Brahma, a throat shining like a sapphire, strong rounded shoulders, feet like lotus petals, and a form like the morning sun.

COMMENTARY – Vallalar longs to see God's physical presence at the holy city of Arunai. He asks for the grace to stand before Lord Siva's majestic, radiant form—praised even by the creator and preserver gods—hoping it will finally calm his restless heart.

2

அன்பர்தம் மனத்தே இன்பமுற் றவைகள் அளித்தவர் களித்திடப் புரியும்
பொன்பொலி மேனிக் கருணையங் கடலே பொய்யனேன் பொய்மைகண் டின்னும்
துன்பமுற் றலையச் செய்திடேல் அருணைத் தொல்நக ரிடத்துன தெழில்கண்
டென்புளம் உருகத் துதித்திடல் வேண்டும் இவ்வரம் எனக்கிவண் அருளே.

aṉpartam maṉattē iṉpamuṟ ṟavaikaḷ aḷittavar kaḷittiṭap puriyum poṉpoli mēṉik karuṇaiyaṅ kaṭalē poyyaṉēṉ poymaikaṇ ṭiṉṉum tuṉpamuṟ ṟalaiyac ceytiṭēl aruṇait tolnaka riṭattuṉa teḻilkaṇ ṭeṉpuḷam urukat tutittiṭal vēṇṭum ivvaram eṉakkivaṇ aruḷē.

TRANSLATION – O beautiful ocean of compassion with a golden body, you grant joyous things to the minds of your devotees and make them rejoice. I am a false one. Do not look at my falsehood and make me wander in suffering anymore. I must praise you with my very bones and heart

melting as I behold your beauty in the ancient city of Arunai. Grant me this boon right here.

COMMENTARY – God is an ocean of compassion who brings pure joy to the minds of true devotees. Vallalar contrasts this divine perfection with his own sense of falsehood and inner turmoil. He asks God to overlook his flaws and end his wandering. His only request is the chance to stand in the ancient city of Arunai, praising the Lord with a melting heart.

3

பூத்திடும் அவனும் காத்திடு பவனும் புள்விலங் குருக்கொடு நேடி
ஏத்திடும் முடியும் கூத்திடும் அடியும் இன்னமும் காண்கிலர் என்றும்
கோத்திடும் அடியர் மாலையின் அளவில் குலவினை என்றுநல் லோர்கள்
சாற்றிடும் அதுகேட் டுவந்தனன் நினது சந்நிதி உறஎனக் கருளே.

pūttiṭum avaṉum kāttiṭu pavaṉum puḷvilaṅ kurukkoṭu nēṭi ēttiṭum muṭiyum kūttiṭum aṭiyum iṉṉamum kāṇkilar eṉṟum kōttiṭum aṭiyar mālaiyiṉ aḷavil kulaviṉai eṉṟunal lōrkaḷ cāṟṟiṭum atukēṭ ṭuvantaṉaṉ niṉatu canniti uṟa-eṉak karuḷē.

TRANSLATION – The creator and the protector took the forms of a bird and a beast to search for your head and your dancing feet. They praise you, yet they still cannot see them. The good people declare that you joyfully abide within the garland of devotees strung together forever. Hearing this, I rejoiced. Grant me the grace to reach your sacred presence.

COMMENTARY – Vallalar recalls an ancient story where the creator and protector gods took the forms of a bird and a boar to find the top and bottom of a massive pillar of divine light. They failed to measure God's full extent. Yet, the wise say God happily makes a home among humble devotees. This gives Vallalar immense hope to join that sacred presence.

4

அருள்பழுத் தோங்கும் ஆனந்தத் தருவே அற்புத அமலநித் தியமே
தெருள்பழுத் தோங்கும் சித்தர்த்தம் உரிமைச் செல்வமே அருணையந் தேவே
இருள்பழுத் தோங்கும் நெஞ்சினேன் எனினும் என்பிழை பொறுத்துநின் கோயில்
பொருள்பழுத்தோங்கும் சந்நிதி முன்னர்ப்போந்துனைப் போற்றுமாறருளே.

aruḷpaḻut tōṅkum āṉantat taruvē aṟputa amalanit tiyamē teruḷpaḻut tōṅkum cittartam urimaic celvamē aruṇaiyan tēvē iruḷpaḻut tōṅkum neñciṉēṉ eṉiṉum eṉpiḻai poṟuttuniṉ kōyil poruḷpaḻuttōṅkum canniti muṉṉarppōntuṉaip pōṟṟumāṟaruḷē.

TRANSLATION – O tree of bliss ripening with grace. O wonderful, pure, eternal one. O rightful wealth of the Siddhars who flourish with mature clarity. O beautiful Lord of Arunai. Even though I possess a heart overgrown with darkness, forgive my faults. Grant me the grace to stand before the rich and sacred presence of your temple and praise you.

COMMENTARY – God is the ultimate treasure for the Siddhars (perfected beings who have attained spiritual clarity). Feeling his own heart is thick with darkness, Vallalar asks for forgiveness. He seeks the simple grace of standing before the temple's rich presence to offer his praise.

5

மறையும் அம் மறையின் வாய்மையும் ஆகி மன்னிய வள்ளலே மலர்மேல்
இறையும்மா தவனும் இறையும்இன் னவன்என் றெய்திடா இறைவனே அடியேன்
பொறையும்நன் னிறையும் அறிவும்நற் செறிவும் பொருந்திடாப் பொய்யனேன் எனினும்
அறையும்நற் புகழ்சேர் அருணையை விழைந்தேன் அங்கெனை அடைகுவித் தருளே.

maṟaiyum am maṟaiyiṉ vāymaiyum āki maṉṉiya vaḷḷalē malarmēl
iṟaiyummā tavaṉum iṟaiyumiṉ ṉavaṉeṉ ṟeytiṭā iṟaivaṉē aṭiyēṉ
poṟaiyumnaṉ ṉiṟaiyum aṟivumnaṟ ceṟivum poruntiṭāp poyyaṉēṉ eṉiṉum
aṟaiyumnaṟ pukaḻcēr aruṇaiyai viḻaintēṉ aṅkeṉai aṭaikuvit taruḷē.

TRANSLATION – O eternal benefactor, you became the scriptures and the truth of those scriptures. O Lord, the god on the lotus and the great ascetic cannot reach you and measure your greatness. I am a false one lacking patience, complete perfection, knowledge, and good composure. Even so, I long for Arunai of resounding good fame. Grant me your grace and bring me to that place.

COMMENTARY – God is both the sacred scriptures and the living truth they contain. Vallalar admits his personal shortcomings, yet his longing for Arunai remains powerful. He asks the ultimate benefactor to guide him safely to that sacred destination.

6

தேடுவார் தேடும் செல்வமே சிவமே திருஅரு ணாபுரித் தேவே
